பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

15 01 2025 **WEDNESDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தோ – பசிபிக் பிராந்தியத்தை பாதுகாப்பான, வளமான பகுதியாக மாற்ற இந்தியா தொடர்ந்து ஆதரவு அளித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. ராணுவ தினத்தையொட்டி, குடியரசுத் தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் வீரர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

3. திருவள்ளுவரின் புகழை போற்றும் வகையில் பிரதமர் திரு நரேந்திர மோடி, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

4. தமிழக அரசின் திருவள்ளுவர் விருது உள்ளிட்ட பத்து விருதுகளை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று வழங்கினார்.

5. உலகக்கோப்பை கோ-கோ போட்டியில் இந்தியா இன்று ஆடவர் பிரிவில் பெரு அணியையும், மகளிர் பிரிவில் ஈரானையும் எதிர்கொள்கிறது.

<u>*--- இனி விரிவான செய்திகள்---*</u>

**<<<<<<>>>>>**

இந்தோ – பசிபிக் பிராந்தியத்தை பாதுகாப்பான, வளமான பகுதியாக மாற்ற இந்தியா தொடர்ந்து ஆதரவு அளித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மும்பையில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், INS சூரத், INS நீலகிரி மற்றும் INS வாக் ஷீர் ஆகிய கடற்படையின் மூன்று போர் கப்பல்களை பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்த மூன்று போர் கப்பல்களும் பணியில் ஈடுபடுத்தப்படுவது, நமது பாதுகாப்புத்துறையை வலுவான மற்றும் சுயசார்புடையதாக மாற்றுவது என்ற அரசின் உறுதிபாட்டை பிரதிபலிப்பதாக கூறினார்.

இன்றைய தினம் இந்தியாவின் கடல்சார் பாரம்பரியத்திற்கு மிகச்சிறந்த நாள் என்று குறிப்பிட்ட அவர், இந்திய கடற்படைக்கு புதிய வலிமையையும், புதிய தொலைநோக்கையும் வழங்கிய சத்ரபதி சிவாஜி பிறந்த மண்ணில் நடைபெறும் இந்த நிகழ்ச்சி, 21-ஆம் நூற்றாண்டில் நமது கடற்படையை வலுவானதாக்கும் என்றும் தெரிவித்தார்.

உலக அளவில் இந்தியா நம்பிக்கைக்குரிய மற்றும் பொறுப்பான நாடாக உருவெடுத்துள்ளது என்றும் பிரதமர் தெரிவித்தார்.

முன்னதாக, இந்த நிகழ்ச்சியில் பேசிய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், இந்த புதிய போர் கப்பல்கள் அர்ப்பணிக்கப்பட்டிருப்பது இந்திய பெருங்கடல் பிராந்தியத்தில் இந்தியாவின் வலிமை அதிகரித்து வருவதை எடுத்துக்காட்டுவதாக கூறினார்.

<<<<<<>>>>>

ராணுவ தினம் நாடுமுழுவதும் இன்று கொண்டாடப்படுகிறது.

நாடு சுதந்திரம் அடைந்தபின், ஆங்கிலேயே தளபதிகளிடமிருந்து இந்தியாவை சேர்ந்த ஃபீல்டு மார்ஷல் கே எம் கரியப்பா, 1949-ஆம் ஆண்டு இதேநாளில், ராணுவத்தின் தலைமை பொறுப்பை ஏற்றதை குறிக்கும் வகையில் இந்நாள் கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், நாட்டின் இறையாண்மையை பாதுகாப்பதிலும், தேச பாதுகாப்பை உறுதி செய்வதிலும் ராணுவத்தின் உறுதிப்பாடு ஒட்டுமொத்த நாட்டிற்கும் உத்வேகம் அளிப்பதாக கூறியுள்ளார்.

தாய்நாட்டு சேவையில் எண்ணற்ற தியாகங்களை புரிந்த வீரர்களை நாடு நன்றியுடன் நினைவுகூறுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பேரிடர் மற்றும் நெருக்கடி காலங்களில் ராணுவத்தின் மனிதநேய பணிகளுக்கும் குடியரசுத்தலைவர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், நாட்டின் துணிச்சல் மிக்க ராணுவ வீரர்கள், முன்னாள் படை வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பல்வேறு சீர்திருத்தங்கள் மற்றும் நவீனமயமாக்கலில் கவனம் செலுத்துவதன் வாயிலாக, ஆயுதப்படையினர் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நலனை பாதுகாக்க அரசு உறுதிபூண்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

மேலும், கோடிக்கணக்கான இந்தியர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதில் நாள்தோறும் அயராது பணியாற்றிவரும் துணிச்சல் மிக்க வீரர்களின் தியாகத்தை நாட்டு மக்கள் நினைவுகூறுவதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்நாளையொட்டி, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

<<<<<<>>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்…

*(சவுண்ட் பைட் - **Song - 8** செகண்ட்ஸ்)*

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்றுவரும் மகா கும்பமேளாவின் மூன்றாம் நாளான இன்றும் ஏராளமானோர் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி வருகின்றனர்.

அங்குள்ள கும்பமேளா முகாமில் நடைபெற்ற சிறப்பு யாகத்தில், ரிஷிகேஷை சேர்ந்த சுவாமி சித்தானந்த் சரஸ்வதி, சாத்வி பகவதி சரஸ்வதி மற்றும் பக்தர்கள் பங்கேற்றனர்.

அப்போது பேசிய சாத்வி பகவதி சரஸ்வதி, பல்வேறு நாடுகளையும் சேர்ந்த பக்தர்கள் இங்கு புனித நீராடுவது, உலகம் முழுவதும் ஒரே குடும்பம் என்ற வசுதெய்வ குடும்பக கோட்பாடுகளை மகா கும்பமேளா பிரதிபலிப்பதாக தெரிவித்தார்.

இதனிடையே, கும்பமேளாவையொட்டி, ஜம்மு காஷ்மீரின் கத்ராவில் உள்ள மாதா வைஷ்ணவ தேவி ரயில் நிலையத்தில் இருந்து, பிரயாக்ராஜுக்கு மூன்று சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என வடக்கு ரயில்வே அறிவித்துள்ளது.

இந்த சிறப்பு ரயில்கள் வரும் 24 –ஆம் தேதியும், அடுத்த மாதம் 7 மற்றும் 14-ஆம் தேதிகளிலும் அதிகாலை மணி 3.50-க்கு கத்ராவிலிருந்து புறப்பட்டு மறுநாள் காலை மணி 4.25-க்கு பிரயாக்ராஜை சென்றடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

*(சவுண்ட் பைட் - **Song - 8** செகண்ட்ஸ்)*

**<<<<<<>>>>>**

ஜம்மு காஷ்மீரின் ரஜோரி மாவட்டத்துக்கு உட்பட்ட பாதல் கிராமத்தில் மர்ம நோய் தாக்கி இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த ஒரு மாதத்தில் மட்டும் இந்த நோய்க்கு 14 பேர் பலியாகியுள்ளதாக எமது ஜம்மு செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<<<>>>>>**

திருவள்ளுவர் தினத்தையொட்டி, தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன், திருவள்ளுவருக்கு புகழாரம் சூட்டியுள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், உலகின் மூத்த மொழியான நமது தமிழ்மொழியில் ஒப்பற்ற புலவரும், உயிர்கள் அனைத்திற்குமான உலகப்பொதுமறையான திருக்குறளை நல்கிய அய்யன் திருவள்ளுவர் தினம் இன்று கொண்டாடப்படுவதை சுட்டிக்காட்டியுள்ளார்.

முக்காலத்திற்கும் ஏற்ற, உலகத்தோர் அனைவரும் கற்றுவாழத் தகுந்த கருத்துக்களையும், அறிவுரைகளையும் இரண்டு வரிகளில் உள்ளடக்கிய திருக்குறளை 35-க்கும் மேற்பட்ட மொழிகளில், மொழி பெயர்க்கவும், வெளிநாடுகளில் திருவள்ளுவருக்கு சிலை அமைத்தல் மற்றும் அவரது பெயரில் கலாச்சார மையங்களை அமைப்பது என பிரதமர் திரு

நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, திருவள்ளுவருக்கு புகழ் சேர்த்து வருவதாகவும் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

ஒழுக்க நெறிகளையும், சமத்துவம் மற்றும் தனிமனித வாழ்க்கை பாடங்களையும், திருக்குறள் மூலமாக விதைத்து சென்ற அய்யன் திருவள்ளுவரின் புகழை போற்றி வணங்குவோம் என்று அவர் தமது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

திருவள்ளுவர் திருநாள் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, சென்னை கடற்கரை காமராஜர் சாலையில் உள்ள திருவள்ளுவர் சிலைக்கு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் மற்றும் மாநில அமைச்சர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

அதனைத்தொடர்ந்து, சென்னை தலைமைச்செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அய்யன் திருவள்ளுவர் விருது உள்ளிட்ட பத்து விருதுகளை தமிழறிஞர்கள் மற்றும் சாதனையாளர்களுக்கு முதலமைச்சர் வழங்கினார்.

விருது பெற்றவர்களுக்கு பொற்கிழி மற்றும் தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் திருவள்ளுவர் திரைப்படத்தின் முதல் பாடல் குறுந்தகட்டையும் முதலமைச்சர் வெளியிட்டார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் பொங்கல் பண்டிகையின் இரண்டாம் நாளான இன்று மாட்டுப்பொங்கல் கொண்டாடப்பட்டு வருகிறது.

கால்நடைகளுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக, இந்நாள் கொண்டாடப்படுகிறது.

மாட்டுப்பொங்கலையொட்டி, தஞ்சை பெரிய கோவிலில் உள்ள நந்தி சிலைக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு, பூஜைகள் நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் – நந்தகோபால் – 36 செகண்ட்ஸ்)*

இதனிடையே, மதுரை மாவட்டம் பாலமேட்டில் நடைபெற்றுவரும் ஜல்லிக்கட்டு போட்டியில், காளைகள் முட்டியதில் 12 மாடுபிடி வீரர்கள், இரண்டு பார்வையாளர்கள் என 14 பேர் காயமடைந்தனர்.

இவர்களில் ஒரு மாடுபிடி வீரர் மேல் சிகிச்சைக்காக மதுரை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திருச்சி மாவட்டம் சூடியூரில் நடைபெற்றுவரும் ஜல்லிக்கட்டு போட்டியிலும் ஏராளமான காளைகள் மற்றும் வீரர்கள் பங்கேற்றுள்ளனர்.

<<<<<<>>>>>

தென்னாப்பிரிக்காவில் சட்டவிரோதமாக செயல்பட்டு வந்த தங்கச் சுரங்கத்தில் ஏற்பட்ட விபத்தில் சிக்கிய 36 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

மேலும், நூற்றுக்கணக்கானோர் சுரங்கத்தில் சிக்கியிருக்கக்கூடும் என்று அஞ்சப்படுவதால்மீட்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை கோ-கோ போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் இந்திய மகளிர் அணி ஈரானை எதிர்கொள்கிறது.

புதுதில்லியில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு ஏழு மணிக்கு தொடங்குகிறது.

ஆடவர் பிரிவில் இந்தியா, பெரு அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு மணி 8.15-க்கு தொடங்குகிறது.

-------------

அயர்லாந்துக்கு எதிரான மகளிர் 3-வது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியாவின் ஸ்மிருதி மந்தனா சதம் அடித்துள்ளார்.

ராஜ்கோட்டில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், இந்தியா சற்றுமுன்வரை 24 புள்ளி ஐந்து ஓவரில் விக்கெட் இழப்பின்றி 213 ரன் எடுத்துள்ளது.

<<<<<<END>>>>>